# தேச பக்தி
DHESA BAKTHI
நடுநிலை காலை நாளிதழ்
RNI.No.TNTAM/2022/86012
ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779
★மலர்:05 ★இதழ்: 114 ★ 25.08.2026 ★தமிழ் நாளிதழ் ★செவ்வாய்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை
★Volume:05 ★Issue:114 ★25.08.2026 ★TamilDaily ★Tuesday ★Page-4 ★Price-₹5/- Chennai



தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


# பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்படுகிறது

## முதல்வர் விஜய் வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள் என்ன?

பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கைவிடப்படும்என்று சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

பேரவையில் 110வது விதியின் கீழ் முக்கிய அறிவிப்புகளை முதல்வர் விஜய் நேற்று வெளியிட்டார். அதன் விவரம்: இந்திய விமானநிலையங்கள் ஆணையத்தால் இயக்கப்படும் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் ஆண்டுக்கு 3 கோடி பயணிகளைக் கையாளும் திறன் கொண்டதாக உள்ளது.

வளர்ந்துவரும் சென்னை மாநகரத்தின் தேவை, பயணிகள் வசதி, தொழில் வளர்ச்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டும், சரக்குப் போக்குவரத்தை அதிகரிக்கவும் புதிய விமானநிலையம்அமைப்பதற்கானதேவை ஏற்பட்டுள்ளது. அதற்கு தேர்வு செய்யப்படும் இடம் பெரிய அளவில் விவசாயிகளை பாதிக்காத,அதிகஅளவில்குடியிருப்புகளை அகற்றாத வகையில் அமைய வேண்டும்.

ஆனால், முந்தைய அரசு விவசாயிகளை பெரிய அளவில் பாதிக்கும் வகையிலும், குடியிருப்புகளை அதிக அளவில் அகற்றும் வகையிலும் விமான நிலையத்தை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. காஞ்சிபுரம் மாவட்டம் ஏகனாபுரம் மற்றும் இதர கிராம மக்கள் இந்த விமான நிலையம் அமைப்பதை எதிர்த்து நடத்திய போராட்டங்களை அறிந்து, நான் கடந்த 2025 ஜன.20 ம் தேதி அங்கு சென்று, மக்களின் குறைகளைக் கேட்டறிந்தேன்.

பின்னர், ''சென்னை பரந்தூர் மற்றும் அதைச்சுற்றியுள்ள12கிராமங்களில்அமைய இருக்கும் விமான நிலையத்தை எதிர்த்துப் போராடும் மக்களுடன் நான் உறுதியாக நிற்கிறேன். நீண்ட நாட்களாக இத்திட்டத்துக்கு எதிராகப் போராடிவரும் விவசாயிகளுக்கு எனது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன். விக்கிரவாண்டியில் கடந்த 2024 அக்டோபரில் நடந்த பொதுக் கூட்டத்திலேயே, பரந்தூர் விமான நிலையத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளேன். தொழில் வளர்ச்சி மற்றும் அதில் விமான நிலையங்களின் பங்குபற்றி நான் நன்கு அறிவேன். எனினும், பரந்தூரில் இத்திட்டம் அமையக் கூடாது. அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்காமல், விவசாய நிலங்கள் அதிக அளவில் பாதிக்கப்படாத வகையில் மாற்று இடம் தேர்வு செய்ய வேண்டும்'' என்று தெரிவித்திருந்தேன்.

இந்த நிலையில், புதிய விமானநிலையம் அமைப்பது குறித்து உயர் அதிகாரிகள், துறை வல்லுநர்களிடம் விரிவாக ஆலோசனை நடத்தினேன். ஏற்கெனவே நான் உறுதி அளித்தபடி, பரந்தூரில் புதியவிமான நிலையம் அமைக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்த அரசால் கைவிடப்படும்.



மாற்று இடங்கள் தேர்வு: துறை வல்லுநர்கள், கல்வியாளர்களிடம் கலந்துபேசி, விவசாய நிலங்கள், குடியிருப்புகளுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாதவாறு புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பொருத்தமான சில மாற்று இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அந்த இடங்களின் தொழில்நுட்ப ரீதியான சாத்தியக்கூறுகளை விரிவாக ஆய்வு மேற்கொண்டு புதிய விமான நிலையத்துக்கான இடம் விரைவில் இறுதி செய்யப்படும்.

புதிதாக 5வது முனையம்: இதற்கிடையே, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை மேலும் விரிவாக்கம் செய்து, அதன் வடமேற்குப் பகுதியில் ஆண்டுக்கு கூடுதலாக 2 கோடிபயணிகளைக் கையாளும் வகையில் புதிதாக 5வது பயணிகள் முனையம் மற்றும் அதற்கான அணுகுசாலை, மேம்பாலம் அமைக்க இந்திய விமான நிலையங்கள் ஆணையத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நடந்து வரும் 3வது பயணிகள் முனையம் கட்டுமானப் பணிகள் முடிந்த பிறகு, ஆண்டுக்கு 3.50 கோடி பயணிகளைக் கையாளக் கூடியதாக இருக்கும்.

அந்த முனையம் செயலாக்கத்துக்குப் பிறகு, ஆண்டுக்கு மொத்தம் 5.50 கோடி பயணிகளைக் கையாளக்கூடியதாக இந்த விமானநிலையம் இருக்கும். இதன்மூலம், சென்னை விமானநிலைய சேவைகள் மேம்படுத்தப்படுவதோடு, புதிய விமான நிலையம் அமையும் வரை பயணிகளின் போக்குவரத்து தேவை பூர்த்தி செய்யப்படும்.

குடும்பத் தலைவிகள் பயன்பெறும் வகையில் முதல்கட்டமாக 'அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்' திட்டத்தில் ஆண்டுக்கு 3 எரிவாயு சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும். மகளிர் இலவச பயணத் திட்டத்தை விரிவுபடுத்தி, பெருமளவில் பயனளிக்கும் விதமாக, 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில், தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளான அக்.2ம் தேதி முதல் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.இவ்வாறு முதல்வர் அறிவித்தார்.

'அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்'

குடும்பத் தலைவிகள் பயன்பெறும் வகையில்,'அன்னபூரணிசூப்பர்சிக்ஸ்'திட்டத்தில் முதல்கட்டமாக ஆண்டுக்கு 3 எரிவாயு சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்படும். பயனாளிகள் பதிவு செய்து, சிலிண்டரை பெற்றவுடன், சிலிண்டருக்கான விலை அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

ஆண்டு வருமானம் ரூ.2.50 லட்சத்துக்கு மிகாமல் உள்ள, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், சிறு, குறு விவசாயிகள், மாற்றுத் திறனாளிகள் உட்பட நலிந்த நிலையில் உள்ள சுமார் 1 கோடியே 30 லட்சத்து 16 ஆயிரத்து 104 குடும்பங்கள் பயனடையும். இத்திட்டம் வரும் பொங்கல் பண்டிகை (ஜனவரி 2027) முதல் செயல்பாட்டுக்கு வரும். இத்திட்டத்துக்காக ஆண்டுதோறும் சுமார் ரூ.4 ஆயிரம் கோடி ஒதுக்கப்படும்.

'வெற்றிப் பயணம்' திட்டம்

மகளிர் இலவச பயணத் திட்டத்தை விரிவுபடுத்தி, 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில், மகாத்மா காந்தியடிகள் பிறந்தநாளான அக்.2 முதல் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. முதல் கட்டமாக, மாநகரம், நகரங்களில் சாதாரணப் பேருந்துகள் மட்டுமின்றி எக்ஸ்பிரஸ், எல்எஸ்எஸ், டீலக்ஸ் அரசுப் பேருந்துகளிலும், மகளிர் இலவசமாக பயணிக்கலாம். கூடுதலாக, மாவட்டங்களுக்கு இடையே பயணம் மேற்கொள்ள ஏதுவாக புறநகர் மற்றும் மலைப் பகுதிகளில், சாதாரணகட்டணப் பேருந்துகளிலும், மகளிர் இலவசமாகப் பயணிக்கலாம். இதற்கு வருமான உச்சவரம்போ, பயண எண்ணிக்கையிலோ கட்டுப்பாடு இல்லை. திருநர்களும் (Trans gender) இலவசமாக பயணிக்கலாம். இதை செயல்படுத்த ஆண்டுதோறும் ரூ.6 ஆயிரம் கோடி செலவினம் ஏற்படும்.

# கம்பத்தில் அரசு கலைக்கல்லூரி அமைக்க தீவிர நடவடிக்கை

## எம்.எல்.ஏ. பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா முயற்சியால் முதல்வர் உத்தரவு

தேனி மாவட்டம் கம்பம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு கலைக் கல்லூரி அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யும் பணி தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் அதிகம் வசிக்கும் இப்பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும் என்பது தொகுதி மக்களின் மிக முக்கிய எதிர்பார்ப்பாக இருந்து வந்தது.

தனது தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின்படி, கம்பம் தொகுதி மக்களின் இந்த கோரிக்கையை சட்டமன்றத்தில் தொடர்ச்சியாக வலியுறுத்தி பேசியதாக கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா சுட்டிக்காட்டியுள்ளார். அவரது இந்தத் தீவிர முயற்சியின் பலனாகவே, கம்பம் தொகுதியில் புதிய அரசு கலைக் கல்லூரி அமைக்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக அரசு பொறுப்பேற்ற குறுகிய காலத்திலேயே, தாம் சட்டமன்றத்தில் எழுப்பிய கோரிக்கையை ஏற்றுகல்லூரிஅமைப்பதற்கான முதற்கட்ட பணிகள் தொடங்கப்பட்டு இடம் தேர்வு விரைவுபடுத்தப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



தொடர்ந்து, தேர்தல் நேரத்தில் தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதோடு, கம்பம் தொகுதி மக்களின்தேவைகளை நேரில் அறிந்து உடனுக்குடன் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி அளித்துள்ளார்.

மேலும், கம்பம் மக்களின் மற்றொரு முக்கிய கோரிக்கையை ஏற்று, சட்டமன்றத்தில் தாம் முன்வைத்த வேண்டுகோளின்படி, பிரபல திரைப்பட இயக்குநர் பாரதிராஜாவுக்கு தேனியில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்கவும் முதலமைச்சர் ஒப்புதல் அளித்து உத்தரவிட்டுள்ளார். இந்த அறிவிப்புகள் கம்பம் தொகுதி மக்களிடையே பெரும் வரவேற்பையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாக சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# அடுத்த கல்வியாண்டு முதல் 'டிஎன்அறிவு' புதிய பாடத்திட்டம்

## பள்ளிக்கல்வித் துறை ராஜ்மோகன் அறிவிப்பு

தமிழகத்தில் 1 முதல் 12 ம் வகுப்புவரை பயிலும் மாணவர்களின் திறன் மேம்பாட்டுக்காக 'டிஎன் அறிவு' எனும் புதிய பாடத்திட்டம் அமல்படுத்தப்படும் என்று அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.



தமிழக சட்டப்பேரவையில் நேற்று அவர் வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு: 1 முதல் 12 ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் சிந்தனை மற்றும் படைப்பாற்றலை வளர்க்க 'டிஎன் அறிவு' எனும் புதிய பாடத்திட்டம் 202728ம் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும்.

அரசுப் பள்ளிகளில் 2 முதல் 9ம் வகுப்பு வரையான மாணவர்களின் கற்றல் இடைவெளியைக் குறைக்க ரூ.12 கோடியில் 'திறன்ப்ளஸ்'விரிவாக்கம் செய்யப்படும்.

6 முதல் 12ம் வகுப்பு வரை செயற்கை நுண்ணறிவு, எந்திரனியல் மற்றும் மெய்நிகர் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய 'டிஎன் ஸ்பார்க்' திட்டம் விரிவுபடுத்தப்படும்.

இதுதவிர அரசுப் பள்ளி மாணவர்கள் தேசிய உயர் கல்வி நிறுவனங்களில் சேருவதை ஊக்குவிக்க சிறப்புப் பயிற்சி வழங்கும் 'வெற்றிப் பாதை' திட்டம் 172 பள்ளிகளில் செயல்படுத்தப்படும்.

6 முதல் 12 ம் வகுப்பு மாணவர்களின் பகுப்பாய்வு திறன்களை மேம்படுத்த ரூ.18 கோடியில் மதிச்சுடர் திட்டம், மாணவர்களின் புதுமைச் சிந்தனையை வளர்க்க 'டிஎன் இக்னைட்' திட்டம் கொண்டு வரப்படும்.

மாணவர்களின்தனித்திறன்களை வெளிப்படுத்துவதற்காக 6,279 உயர் நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 'மகிழ்வுடன் முன்னேறு' திட்டம் செயல்படுத்தப்படும். இதன்கீழ் மாதம் ஒருநாள் மாணவர்கள் புத்தகப்பை இல்லாமல் மகிழ்ச்சியாக பள்ளிகளுக்கு செல்லலாம்.

மேலும், 50 அரசுப் பள்ளிகள் 'ஸ்போர்ட்ஸ் ப்ளஸ்' சிறப்புப் பள்ளிகளாக உருவாக்கப்படும். 9 முதல் 12ம் வகுப்பு மாணவர்களுக்குப் புதிய விளையாட்டு சீருடை வழங்கப்படும்.

சென்னை புத்தகக் காட்சிக்கான அரசு மானியம் ரூ.1 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், அரிய 25 தமிழ் நூல்கள் மறுபதிப்பு செய்யப்படும் என்பன உட்பட 31 அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளன.

துறை செயலருக்கு நன்றி

அமைச்சர் ராஜ்மோகன் தனது பதிலுரையின் முடிவில், பள்ளிக் கல்வித்துறையின் தூணாக விளங்கும் செயலர் பி.சந்தரமோகன், இயக்குநர்லதா, அரசு மாதிரிப் பள்ளி உறுப்பினர் செயலர் ஆர். சுதன், தொடக்க கல்வி இயக்குநர் பு.ஆ.நரேஷ், அரசு தேர்வுத்துறை இயக்குநர் சசிகலா, தனியார் பள்ளிகளின் இயக்குநர் சுகன்யா, ஆசிரியர் தேர்வு வாரிய செயலர் ராமேஸ்வர முருகன் மற்றும் நகராட்சி நிர்வாகத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ககன்தீப் சிங் பேடி, மதுசூதனரெட்டி, சமீரன் உள்ளிட்டோருக்கு நன்றி தெரிவித்தார்.



# பள்ளிக்கல்வித்துறையில் திமுக ஆட்சியில் பணம் வசூலுக்கு நானே சாட்சி: நிதி அமைச்சர் மரிய வில்சன் குற்றச்சாட்டு

சட்டப்பேரவையில் நகராட்சி நிர்வாகம், பள்ளிக்கல்வித்துறை உள்ளிட்ட துறைகள் மீதான மானியக் கோரிக்கை விவாதம் நேற்று நடைபெற்றது.

அப்போது, நிதியமைச்சர் மரிய வில்சன் பேசியதாவது: தமிழக உயர்கல்வியில் எண்ணிக்கையா, தரமா என்கிற கேள்வி எழுகிறது.

எத்தனை பள்ளிகள், எத்தனை கல்லூரிகள் கொண்டு வந்தோம் என்பது முக்கியமில்லை. தரம் தான் முக்கியம். முதல்வர் விஜய்யின் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் விஸ்வநாதன் பங்கேற்றிருந்தார்.

அரசு கலைக் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகளில் எத்தனை சான்றிதழ் வாங்கியிருக்கிறார்கள் என்று பட்டியல் எடுத்தோம்.

ஆனால், கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளாக ஒன்றுமே இல்லை.

ஒரு தரச்சான்றிதழ்கூட வாங்கவில்லை.

தனியார் கல்லூரிகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அதனால் தான், வேலைவாய்ப்புகளும் கிடைக்கிறது. பள்ளிக் கல்வித் துறை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் நிறைய விஷயங்கள் ஆலோசனை செய்யப்பட்டன.

நிறைய முறைகேடுகள் குறித்து அதில் சொல்லப்பட்டன.

# தேனியில் இயக்குநர் பாரதிராஜாவுக்கு மணிமண்டபம்: சட்டப்பேரவையில் அமைச்சர் தகவல்

## சென்னையில் ரூ.5 கோடியில் தலைவர்களின் ஒருங்கிணைந்த கோட்டம்

தமிழக சட்டப்பேரவையில் தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரம், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு பதிலளித்த அமைச்சர் ராஜ்மோகன், புதிய அறிவிப்புகளை வெளியிட்டுப் பேசியதாவது: வேலு நாச்சியார், பெரியார், அம்பேத்கர், காமராஜர் மற்றும் அஞ்சலையம்மாள் ஆகியோரை சிறப்பிக்கும் விதமாக நூலகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த கோட்டம் சென்னையில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

இயக்குநர் பாரதிராஜாவின் கலைச் சாதனைகளைப் போற்றும் வகையில், அவரது சொந்த ஊரான தேனியில் திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் ரூ.2.50 கோடியில் நிறுவப்படும்.



சென்னை தரமணி தமிழ்நாடு அரசு எம்ஜிஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில், ரூ.9.25 கோடியில் அதிநவீன தொழில்நுட்பக் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு, நவீன செயற்கை நுண்ணறிவு ஆய்வகம் அமைக்கப்படும்.

படப்பிடிப்புக்கான அனுமதி, தடையின்மைச் சான்றுகள், நலவாரிய விண்ணப்பங்கள் மற்றும் வள்ளுவர் கோட்டம், கலைவாணர் அரங்கம் உள்ளிட்டவற்றின் முன்பதிவுகளை எளிதாகப்பெற ஒற்றைச் சாளர இணைய தள வசதி ஏற்படுத்தப்படும். அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தின் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கு கூடுதல் நிதியாக ரூ.5.75 கோடி தொடர் செலவினமாக வழங்கப்படும்.

இணையம், மின்னணுத் தளங்களில் தமிழ் மொழியை ஆக்கப்பூர்வமாக வளர்க்கும் 2 அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் தலா ரூ.25 ஆயிரம் ரொக்கப் பரிசுடன் 'இணைய தமிழ்ச்செம்மல்' விருது வழங்கப்படும். தமிழக எல்லை போராட்டக் காவலர்களுக்கு மாத உதவித் தொகை ரூ.7,500லிருந்து ரூ.10,000ஆக உயர்த்தப்படும். சென்னை அரசு மைய அச்சகத்தில் நவீன பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய காகிதக் கிடங்கு மற்றும் பொதுப் பண்டகசாலை ரூ.7.3 கோடி செலவில் கட்டப்படும் என்பன உள்ளிட்ட 23 அறிவிப்புகளை அமைச்சர் வெளியிட்டார்.

### மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன்,தலைமையில்

# இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தில் திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் .ந.ப்ரியா ரவிச்சந்திரன்,இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் .ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., இன்று (24.08.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு குறைகளை கேட்டறிந்தார்கள். மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வருவாய்த்துறை நிலப்பட்டா குறைகள். பட்டா மாறுதல், இலவச வீட்டு மனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை வேளாண்மைத் துறை, காவல்துறை. ஊரக வளர்ச்சித்துறை. நகராட்சி நிர்வாகங்கள், பேரூராட்சித் துறை, கூட்டுறவு. மின்சாரத்துறை சார்பான குறைகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கிராம பொதுப் பிரச்சனைகள், குடிநீர் வசதி, வேலை வாய்ப்பு வேண்டி மனுக்கள் மற்றும் பொதுநலன் குறித்த 410 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு தகுதியானதாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் மற்றும் மனு நிராகரிப்பிற்கான காரணங்களையும் மனுதாரர்களுக்கு வழங்கிட வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.






துறை இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ந.சரவணன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை .ச.செல்வராணி, சமூக பாதுகாப்பு திட்டம் தனித் துணை ஆட்சியர்.கீதாலட்சுமி,பிற்படுத்தப்பட்டோர் மற்றும்சிறுபான்மையினர் நல அலுவலர்.மீனா, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் .பூமா, நேர்முக உதவியாளர் (நிலம்) .சுமதி, மாவட்ட வழங்கல் அலுவலர் பன்னீர் செல்வம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் .செந்தில் குமாரி மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



### இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கு பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பு, போதைப்பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு

இராணிப்பேட்டை மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் முன்னிலையில், அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும்போதைப்பொருள்தடுப்புகுறித்துவிழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், பெண்களுக்கு எதிரான குற்றங்கள், போக்சோசட்டம், குழந்தை திருமணத்தடுப்புச்சட்டம், போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான உதவி எண்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், 'சிங்கப்பெண்' உதவி எண் 1091, குழந்தைகள் உதவி எண் 1098, சைபர் குற்ற உதவி எண் 1930 மற்றும் போதைப்பொருள் தடுப்பு உதவி எண் 10581 உள்ளிட்ட முக்கிய உதவி எண்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதுதொடர்பான துண்டுப் பிரசுரங்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும், தங்களது பள்ளிகளுக்குச் சென்று மாணவ, மாணவிகளுக்கு பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு, தொடர்புடைய சட்டங்கள் மற்றும் போதைப்பொருள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள் மற்றும் பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மஞ்சம்பாக்கம் ஓம் ஸ்ரீ எல்லையம்மன் ஆலயத்தில் 3ம் ஆண்டு ஆடிமாத திருவிழா

மாதவரம் தொகுதி மஞ்சம்பாக்கம் காமராஜர் சாலையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அருள் மிகு ஓம் ஸ்ரீ எல்லையம்மன் ஆலயத்தில் 3ஆம் ஆண்டு ஆடிமாத திருவிழா மஞ்சம்பாக்கம் எல்லையம்மன் அறக்கட்டளை மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு விமர்சியாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

பின்னர் கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்ற சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து அம்மன் உற்சவர் வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் அலங்காரம் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.





இதில் மஞ்சம்பாக்கம் எல்லையம்மன் அறக்கட்டளையின் நிர்வாகிகள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராம பொது மக்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

மேலும் இவ்விழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கினர்.

### செங்குன்றம் பேருந்து நிழற்குடைக்குள் அமைந்துள்ள

# தள்ளுவண்டிகளையும், நிரந்தர கடைகளையும் உடனடியாக அகற்ற பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சியில் பழமை வாய்ந்த அண்ணா பேருந்து நிலையம் அமைந்துள்ளது. இந்தப் பேருந்து நிலையத்தை கடந்த திமுக ஆட்சியில் செங்குன்றம் பேரூராட்சி சார்பில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 2 கோடி 50 இலட்சம் மதிப்பீட்டிலும், பேரூராட்சி சார்பில் கூடுதல் நிதியாக ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டு வருகின்றது.

அதனைத் தொடர்ந்து செங்குன்றம் பேரூராட்சி நிர்வாகம் சார்பில் ஜி. என்டி. சாலையையொட்டி பயணிகள் வெயில் மழையினால் சிரமப்படாமல் இருப்பதற்காக பல இலட்சம் செலவில்நிழற்குடைஅமைத்துள்ளார்கள்.

ஆனால் இந்த நிழற்குடை பயணிகளுக்காக அல்லாமல் சாலையோர வியாபாரிகளின் தள்ளுவண்டி, கடைகளின் வியாபாரத்திற்காக பயன்பட்டு வருகின்றது.

இந்தப் பேருந்து நிழற்குடைக்குள் சாலையோர வியாபாரிகள் தள்ளுவண்டிகளையும், நிரந்தர கடைகளையும் அமைத்து வியாபாரம்செய்துவருவதனால் நிழற்குடைக்கு வெளியே பயணிகள் வெயிலிலும் மழையிலும் அவதிக்குள்ளாகி வருவதாக குற்றஞ்







சாட்டப்படுகின்றது.

மாதவரம் சட்டமன்ற உறுப்பினர், செங்குன்றம் பேரூராட்சி நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுத்து பேருந்து நிழற்குடைகளுக்குள் வியாபாரம் செய்து வரும் தள்ளுவண்டிகளையும், நிரந்தர கடைகளையும் அகற்றி பயணிகள் நிழற்குடையை பயன்படுத்துவதற்கானவசதிகளைசெய்து தர வேண்டுமென்றும், அதே போல் பயணிகள் இருக்கை வசதி இல்லாததனால் பல மணி நேரம் நின்று கொண்டே வெயில் மழையில் காத்திருந்து பயணித்து வருகின்றார்கள். அதற்காகவும் உடனடியாக இருக்கை வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்றுபொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

### திருவள்ளூர் மாவட்டத்தில்

# மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு ரூ.11,400 மதிப்பிலான சக்கர நாற்காலி

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள்




கூட்டரங்கில் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு, மனு வழங்கிய து.பிரபு த/பெ துரை என்பவருக்கு உடனடியாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை வாயிலாக ரூ.11,400 மதிப்பிலான சக்கர நாற்காலியை வழங்கினார். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# நத்தம் அருகே சட்டவிரோதமாக மணல் திருடிய 2 டிப்பர் லாரிகள் பறிமுதல்



திண்டுக்கல் மாவட்டம் நத்தம், அரவங்குறிச்சி பகுதியில் தாசில்தார் டேனியல் பிரேம்குமார் தலைமையிலான வருவாய்த்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்ட போது அவ்வழியாக சட்டவிரோதமாக அனுமதி இன்றி மணல் அள்ளி வந்த 2 டிப்பர் லாரிகளை பறிமுதல் செய்து நத்தம், சேத்துாரை சேர்ந்த ராஜசேகர் (40), மாரி(39), ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



# நில மோசடி வழக்கு மனு தள்ளுபடி

பழனி கோயிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான நிலம் முறைகேடாக பதிவு செய்யப்பட்ட வழக்கு. சிபிஐ விசாரணைக்கு வழக்கை மாற்றக் கோரிய மனுக்களை தள்ளுபடி செய்து மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவு.

### கூடலூரில்

# செப்டம்பர் 14, 15 விநாயகர் சதுர்த்தி விழாவினை முன்னிட்டு இந்து முன்னணி ஆலோசனை கூட்டம்

தேனி தெற்கு மாவட்டம், கூடலூர் இந்து முன்னணி சார்பாக வரும் செப்டம்பர் 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் 32ஆம் ஆண்டு ஸ்ரீவிநாயகர் சதுர்த்தி விழா கோலாகலமாக நடைபெற உள்ளது.

இவ்விழாவினை சிறப்பாக நடத்துவது குறித்த ஆலோசனை கூட்டம் கூடலூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகர துணைத்தலைவர் பிரசாந்த் தலைமை தாங்கினார். நகர செயலாளர் சந்தோஷ் முன்னிலை வகித்தார்.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட தலைவர் V. சுந்தர், மாவட்ட பொதுச்செயலாளர் R. பாலமுருகன் மற்றும் மாவட்ட செயலாளர் ஆச்சி. கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டு, விழா ஏற்பாடுகள் குறித்து பல்வேறு





முக்கிய ஆலோசனைகளை வழங்கினர். கூட்டத்தில், திருமேனி கமிட்டி பொறுப்பாளர்கள் காப்பு கட்டி, விரதம் இருந்து, ஆன்மீக முறைப்படி விழாவை சிறப்பாக நடத்துவது என ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நகர பொறுப்பாளர்கள் சௌந்தர், ஜெகன், சுரேஷ் மற்றும் தினேஷ்குமார் ஆகியோர் செய்திருந்தனர். இக்கூட்டத்தில் திருமேனி கமிட்டி பொறுப்பாளர்கள் 80 பேர் பங்கேற்று விழாவினை சிறப்பாக நடத்துவது குறித்து கலந்துரையாடினர்.

### ஜல்லிக்கற்களால் கரடுமுரடான சாலை;

# வெள்ளேரி-மொரப்பந்தாங்கல் சாலைப்பணியை விரைந்து முடிக்க பொதுமக்கள் கோரிக்கை

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி அருகே வெள்ளேரி–மொரப்பந்தாங்கல் இடையிலான சாலை சீரமைப்புப் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளதால், பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். கிடப்பில் உள்ள சாலைப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆரணி அடுத்த மொரப்பந்தாங்கல் கிராமத்தில் இருந்து வெள்ளேரி செல்லும் சாலை வழியாக மொரப்பந்தாங்கல், ஒண்டிக்குடிசை உள்ளிட்ட கிராமங்களுக்கு பொதுமக்கள் சென்று வருகின்றனர். சுமார் 2 கிலோமீட்டர் தொலைவிலான இந்த சாலை கடந்த சில மாதங்களாக சேதமடைந்து, ஜல்லிக்கற்கள் பெயர்ந்து குண்டும், குழியுமாக காணப்பட்டது. இதனால் இருசக்கர வாகன ஓட்டிகள், பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். இதையடுத்து பொதுமக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து, முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2026–27ஆம் ஆண்டிற்கு ரூ.76.60 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு சாலை அமைக்கும் பணிகள் தொடங்கின.

முதற்கட்டமாக ஜேசிபி இயந்திரம் மூலம் சாலை தோண்டப்பட்டு, ஜல்லிக் கற்கள் கொட்டி சமன்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அதன் பின்னர் தார் சாலை அமைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெறாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தற்போது சாலையில் கொட்டப்பட்டுள்ள ஜல்லிக்கற்கள் பெயர்ந்து, பாதை முழுவதும் கரடுமுரடாக மாறியுள்ளது. இதனால் நடந்து செல்வதற்கே பொதுமக்கள் சிரமப்படுவதுடன், இருசக்கர வாகனங்களில்செல்லும்போதுநிலைதடுமாறி கீழே விழுந்து காயமடையும் சம்பவங்களும் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, வெள்ளேரி–மொரப்பந்தாங்கல் சாலைப் பணிகளை உடனடியாக மீண்டும் தொடங்கி, தரமான முறையில் விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

### சின்னமனூரில்

# "மரம் நடுவோம்! பூமியை காப்போம்!" விழிப்புணர்வு மரக்கன்று நடும் விழா!

தேனி மாவட்டம் சின்னமனூர் நகரம்,மின்நகர் அருகில் அமைந்துள்ள சங்கிலி தேவன் குளம் பகுதியில் 'வீதி லீடர்' (WE THE LEADERS) (மாறுவோம் மாற்றுவோம்) சார்பில் "மரம் நடுவோம்! பூமியைகாப்போம்!" என்னும் பசுமை விழிப்புணர்வு மரக்கன்று நடும் விழா சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வு கடந்த 23082026 அன்று மாலை 05:30 மணியளவில் இனிதே நடைபெற்றது.



சின்னமனூரை பசுமையாக்கவும், பூமிதாயை பாதுகாக்கவும் வலியுறுத்தி நடத்தப்பட்ட இக்கூட்டு பணியில், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் சசிக்குமார், ஈஸ்வரன், கணேசன், சுந்தரதமிழ்பாண்டி, பாஸ்கரன், ஆத்தியப்பன், கண்ணப்பன் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### ஆரணி அருகே சோகம்:

# காரை பின்நோக்கி இயக்கியபோது சக்கரத்தில் சிக்கி 2 வயது குழந்தை உயிரிழப்பு

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி அருகே வீட்டின் முன்பு விளையாடிக் கொண்டிருந்த 2 வயது குழந்தை, கார் பின்நோக்கி இயக்கப்பட்டபோது அதன் பின்பக்க சக்கரத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆரணி அருகேயுள்ள புனலப்பாடி கிராமத்தைச் சேர்ந்த சத்யராஜின் 2 வயது மகன் அகிலேஷ். சம்பவத்தன்று வீட்டின் அருகே நிறுத்தப்பட்டிருந்த காரின் பின்புறத்தில் குழந்தை விளையாடிக் கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

அப்போது காரின் உரிமையாளரும், ஓட்டுநருமான ஜீவா, காரின் பின்புறம் குழந்தை இருப்பதை கவனிக்காமல் காரை பின்நோக்கி இயக்கியதாக தெரிகிறது. இதில் எதிர்பாராதவிதமாக காரின் பின்பக்க சக்கரம் குழந்தை மீது ஏறியதில், அகிலேஷ் பலத்த காயமடைந்தான். குழந்தையின் அலறல் சத்தம் கேட்டு அதிர்ச்சியடைந்த அக்கம் பக்கத்தினர் உடனடியாக அங்கு சென்று காரை நிறுத்தினர். பின்னர் படுகாயமடைந்த குழந்தையை மீட்டு சிகிச்சைக்காக ஆரணி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.அங்கு குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள், ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இதையடுத்து குழந்தையின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக ஆரணி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இச்சம்பவம் குறித்து ஆரணி தாலுகா காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து, கார் உரிமையாளரும் ஓட்டுநருமான ஜீவாவிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், விபத்து எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்தும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த பச்சிளம் குழந்தை எதிர்பாராதவிதமாக கார் சக்கரத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் புனலப்பாடி கிராம மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# பிறந்தநாள் கொண்டாட்டத்தை மக்கள் சேவையாக மாற்றிய 'ஜனநாயகன்' தயாரிப்பாளர்

## திருவண்ணாமலையில் ஆயிரக்கணக்கானோருக்கு அன்னதானம்

'ஜனநாயகன்' திரைப் பட தயாரிப்பாளரும், தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான கே. வெங்கடநாராயணா



வின் பிறந்தநாளை முன்னிட்டு, திருவண்ணாமலையில் ஆயிரக்கணக்கான கிரிவலப் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

திருவண்ணாமலை பே கோபுரத் தெருவில் அமைந்துள்ள சத்திய தருமச்சாலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், கிரிவலம் வந்த பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வடை, பாயசம் உள்ளிட்ட உணவுகளுடன் அன்னதானம் வழங்கப்பட்டது.

பிறந்தநாள் கொண்டாட்டத்தை வெறும் வாழ்த்துகள் மற்றும் விழா நிகழ்ச்சிகளுடன் நிறுத்தாமல், மக்களுக்கு பயனளிக்கும் வகையில் அன்னதானம் வழங்கி சேவை செய்யும் நோக்கில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

திருவண்ணாமலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று அன்னதானத்தை பெற்றுக்கொண்டனர். இதேபோல், டெல்லி, திருப்பதி, மும்பை, விசாகப்பட்டினம், வாரணாசி, திருவனந்தபுரம், பெங்களூரு, கவுகாத்தி உள்ளிட்ட நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களிலும் அன்னதான நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சிகளின் மூலம் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற இந்த அன்னதான நிகழ்ச்சிகள் பொது மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றன.




**திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மதுபான சில்லறை கடைகள் மற்றும் அதனைச் சார்ந்த மதுக்கூடங்கள்26.08.2026(புதன்கிழமை)மிலாடிநபி தினத்தன்றுதற்காலிகமாகமூடப்படவுள்ளது–மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா அறிவிப்பு**

திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் F.L1/F.L2 மற்றும் F.L3 ஆகிய மதுபான உரிம ஸ்தலங்களை, 2003ம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகளின் விதி 12 துணைவிதி (1) The Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1981ன் படி, 26.08.2026 (புதன் கிழமை) மிலாடி நபி (நபிகள் நாயகம் பிறந்த தினம்) தினத்தன்று தற்காலிகமாக மூடுவதற்கு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மேற்படி உத்தரவினை மீறி செயல்படும் F.L1/F.L2 மற்றும் F.L3 ஆகியவற்றின் உரிமதாரர்களின் மீது The Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1981ன் படி, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திருவள்ளூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா அறிவித்துள்ளார்.

### மிலாடி நபியை முன்னிட்டு ஆக.26ல்

# திருவண்ணாமலை மாவட்டத்தில் மதுபானக் கடைகள் மூடல்

மிலாடி நபி பண்டிகையை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் மதுபானக் கடைகள் வரும் ஆகஸ்ட் 26ஆம் தேதி புதன்கிழமை மூடப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர்வந்தனாகார்க் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையரின் உத்தரவின்படி, மிலாடி நபியை முன்னிட்டு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து அரசு மதுபானக்கடைகள் (டாஸ்மாக்), முன்னாள் ராணுவ வீரர்களுக்கான மதுபான அங்காடிகள் (FL4A), அரசு மற்றும் தனியார் மதுபானக் கூடங்கள் (FL3) ஆகியவை மூடப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதன்படி, வரும் 26.08.2026 அன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் மேற்கண்ட அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் எவ்வித விற்பனையும் இன்றி 'Dry Day' கடைப்பிடித்து மூடப்பட்டிருக்கும். மாவட்ட ஆட்சியரின் உத்தரவை மீறி மதுபான விற்பனை நடைபெறாமல் இருப்பதை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தெருநாய்கள் தொல்லையால் சிறுவர்களுக்கு நேர்ந்த சோகம்

## அதிகாரிகளின் கவனமின்மையால் எரசையில் கொடூரம்

தேனி மாவட்டம் சின்னமனூர் ஒன்றியம், எரசை காளியம்மன் கோவில் தெருவில் தெருநாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. அங்கன்வாடி மையத்தில் படித்துவிட்டு வீடு திரும்பிய 4 வயது சிறுவன் கவியரசன் மற்றும் 3 வயது சிறுமி தர்ஷினி ஆகிய இருவரை வெறி நாய் ஒன்று கொடூரமாக கடித்து குதறியுள்ளது. இதில் சிறுவன் கவியரசனுக்கு தொடை பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டு தோல் வெந்துபோன நிலையை அடைந்துள்ளது. பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குச் சின்னமனூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. சிறுமி தர்ஷினிக்குத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்பட்ட நிலையில், தீவிர காயம் அடைந்த சிறுவன் கவியரசன் மேல் சிகிச்சைக்காக க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.



நாய்களின்அச்சுறுத்தலால்கிராமபொது மக்கள் மற்றும் குழந்தைகள் வீட்டை விட்டு வெளியே வர முடியாத சூழல் தொடர்ந்து நிலவுகிறது. உள்ளாட்சி நிர்வாகமும் அதிகாரிகளும் தொடர்ந்து அலட்சியம் காட்டி வருவதே இத்தகைய அசம்பாவிதத்திற்கு காரணம் எனப் பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். மாவட்ட ஆட்சியர் போர்க்கால அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை எடுத்து, எரசை பகுதியில் சுற்றித் திரியும் வெறிநாய்களை கட்டுப்படுத்த வேண்டும். மேலும், இந்த சம்பவத்தில் படுகாயமடைந்து தீவிர சிகிச்சையில் இருக்கும் சிறுவனின் குடும்பத்திற்கு தகுந்த நிவாரண உதவி வழங்கி, இனிவரும் காலங்களில் எந்தவொரு குழந்தையும் இது போன்ற பாதிப்புக்கு உள்ளாகாத வண்ணம் நிரந்தர பாதுகாப்பு உறுதிசெய்யப்பட வேண்டும்.

# நல்லூர் ஊராட்சி அம்பேத்கர் நகரில் 10 கிலோ கஞ்சா பறிமுதல் : இருவர் கைது

தமிழ் நாடு முதலமைச்சர் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவும், ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்தரவின்படியும், காவல் இணை ஆணையாளர் மருத்துவர்



இரா.சிவகுமார் மேற்பார்வையிலும், செங்குன்றம் காவல் மாவட்ட துணை ஆணையாளர் கே.மகேஸ்வரி அறிவுறுத்தலின்படியும், செங்குன்றம் காவல் உதவி ஆணையாளர் பிராங்க் டி ரூபன் மேற்பார்வையிலும், மாதவரம் தொகுதி நல்லூர் ஊராட்சி அம்பேத்கர் நகர் பகுதியில் உள்ள வீட்டில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், சோழவரம் காவல் ஆய்வாளர் கிளாஸ்டின் டேவிட் தலைமையிலான போலீசார் மேற்படி வீட்டிற்கு சென்று அங்கு தங்கியிருந்த சூர்யா (எ) பவர் சூர்யா, (வ/24) மற்றும் சக்திவேல் (எ) பல்லு சக்தி, (வ/27) ஆகியோரிடம் விசாரணை மேற்கொண்டு, நல்லூர் ஊராட்சி அம்பேத்கர் நகர் சுடுகாடு அருகே குற்றவாளிகள் மறைத்து வைத்திருந்த சுமார் 10 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா வின்மதிப்புசுமார்ரூ.1,20,000/ ஆகும். மேலும் விசாரணையில் கஞ்சாவை ஆந்திர மாநிலத்தில் இருந்து வாங்கி கடத்தி வந்தது தெரியவந்தது. இதனை தொடர்ந்து குற்றவாளிகள் மீது சோழவரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# கிருஷ்ணகிரி அருகே உள்ள வேப்பனஅள்ளி, மாகராஜகடை வனப் பகுதியிலிருந்து வெளியேறிய காட்டு யானைகள் தக்காளி, வாழை போன்ற பயிர்களைச் சேதப்படுத்தின

கிருஷ்ணகிரி அருகே உள்ள வேப்பனஅள்ளி, மாகராஜகடை வனப் பகுதியிலிருந்து வெளியேறிய காட்டு யானைகள் தக்காளி, வாழை போன்ற பயிா்களைச் சேதப்படுத்தின.

கிருஷ்ணகிரி அருகே வனப் பகுதியிலிருந்து வெளியேறிய காட்டு யானைகள் தக்காளி, வாழை போன்ற பயிா்களைச் சேதப்படுத்தின. கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஅள்ளி, மாகராஜகடை வனப் பகுதிகளில் கடந்த சில மாதங்களாக ஒற்றைக்கண் யானை உள்பட இரு யானைகள் சுற்றித் திரிந்து வருகின்றன. இந்த யானைகள் அவ்வப்போது, வனப்பகுதியிலிருந்து வெளியேறி வேளாண் பயிா்களைச் சேதப்படுத்தி வருகின்றன. சில நேரங்களில் மனித உயிரிழப்புகளையும் ஏற்படுத்துகின்றன.

இந்த நிலையில், வனப் பகுதியிலிருந்து சனிக்கிழமை இரவு வெளியேறிய இந்த இரு யானைகள், மகாராஜ கடை பகுதியில் சாகுபடி செய்திருந்த வாழை மரங்கள், தக்காளி செடிகளை சேதப்படுத்தின. ஞாயிற்றுக்கிழமை தோட்டத்துக்கு வந்த விவசாயிகள், யானைகளால், பயிா்கள் சேதப்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டு அதிா்ச்சி அடைந்தனா்.



# மக்கள் குறைகளுக்கு விரைந்து தீர்வு காண நடவடிக்கை: 912 மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை

திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 912 மனுக்களை பெற்ற கலெக்டர் வந்தனா கார்க் – மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோருக்கு நலத்திட்ட உதவிகள், 29 பேருக்கு பணி நியமன ஆணைகள்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 912 மனுக்களை நேரில் பெற்றுக்கொண்டு, அவற்றின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து தீர்வு காண சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில் (24.08.2026) நடைபெற்ற இக்கூட்டத்தில், கல்வி உதவித் தொகை, வங்கிக் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, சாதிச் சான்று, வேலைவாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உதவி உபகரணங்கள், சாலை வசதி, பிரதமரின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், வேளாண்மைத் துறை சார்ந்த பயிர்க்கடன், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், தாட்கோ மூலம் கடனுதவி, கூட்டுறவு சங்கங்களில் பயிர்க்கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பான மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டன.

மனுக்களை பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர், ஒவ்வொரு கோரிக்கையின் தன்மையையும் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்து, தகுதியான மனுக்கள் மீது காலதாமதமின்றி நடவடிக்கை மேற்கொண்டு உரிய தீர்வு வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும், செய்யாறு சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 112 மனுக்களும், ஆரணி வருவாய் கோட்டாட்சியர்அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 88 மனுக்களும் பெறப்பட்டன.

இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் உதவி உபகரணங்கள் கோரி மனு அளித்த மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ.11,445 மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிளும், மற்றொரு மாற்றுத்திறனாளிக்கு ரூ.3,285 மதிப்பிலான காதொலி கருவியும் என 2 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.14,730 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் வழங்கினார்.

29 பேருக்கு பணி நியமன ஆணைகள்

தொடர்ந்து, வருவாய்த் துறை சார்பில் கருணை அடிப்படையில் 25 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ச்சி பெற்று மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் பணிப்பார்வையாளர்களாக நியமனம் செய்யப்பட்ட 4 நபர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தின்மூலம் பொது மக்களின் அடிப்படை தேவைகள் மற்றும் நீண்ட கால கோரிக்கைகளை நேரடியாகக் கேட்டறிந்து, அவற்றுக்கு உரிய தீர்வு வழங்க மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு) இளவரசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சுஜாதா, திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலன்) கலைச்செல்வி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செந்தில்குமரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மதுசெழியன், உதவி ஆணையர் (கலால்) வளர்மதி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சாரதா உள்ளிட்ட பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சின்னமனூரில்

# ஓடை பாலத்தின் அடியில் இரவோடு இரவாக சட்டவிரோத பைப்லைன்; பல கோடி ரூபாய் ஆற்று நீர் திருட்டு மோசடி

## அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

தேனி மாவட்டம் சின்னமனூர் பகுதியில் உள்ள ஓடை பாலத்தின் அடியிலும் ஓடை பகுதிகளிலும், எவ்வித அரசு அனுமதியும் இன்றி இரவோடு இரவாக மறைமுகமாக பிவிசி பைப்லைன்கள் அமைக்கப்பட்டு ஆற்றுத் தண்ணீர் திருடப்படுவதாக சமூக ஆர்வலர்களும் அப்பகுதி விவசாயிகளும் கடுமையான குற்றச்சாட்டு களை முன்வைத்துள்ளனர். சின்னமன்னூரிலிருந்து சுமார் 3 கி.மீ தொலைவில் உள்ள ஓடைப் பகுதி மற்றும் அதிலிருந்து 1.5 கி.மீ தொலைவில் அமைந்துள்ள ஆற்றுப் பகுதிகளில், ஆழ்துளைகிணறுகள்(போர்வெல்)அமைத்து, அங்கிருந்து சட்டவிரோதமாக பைப்லைன்கள் கொண்டு செல்லப்படுகின்றன. பொதுமக்களோ அல்லது அதிகாரிகளோ கண்டுபிடிக்க முடியாதபடி, பாலத்தின் அடியிலும் ஓடைப்படுகையிலும் பைப்லைன்களை பதித்து, அதன் மேல் இலை தழைகள், செடி கொடிகள் மற்றும் மண்ணை போட்டு நுட்பமாக மூடி மறைத்துள்ளனர். இந்த சட்டவிரோத பைப்லைன்அமைப்பின் பின்னணியில் பல கோடி ரூபாய் மதிப்பிலான தண்ணீர் விற்பனை மோசடி நடப்பதாக கூறப்படுகிறது. அரசிடம் உரிய அனுமதி பெற்று பைப்லைன் வைத்திருப்பதாக கூறி, நீர் பற்றாக்குறையால் தவிக்கும் பிற விவசாயிகளிடம் ஒரு பைப்லைனுக்கு ₹1 கோடி முதல் ₹1.5 கோடி வரை பேசி விற்பனை செய்து ஏமாற்றி வருவதாக தெரிகிறது. விவசாயத்தை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் கடன் உடன்களை வாங்கி இந்த பைப்லைன்களை வாங்கும் விவசாயிகள், பின்னர் முறைகேடு கண்டுபிடிக்கப்படும்போது பெருமளவில் நஷ்டமடைந்து பெரும் துயரத்திற்கு உள்ளாகின்றனர். ஏற்கனவே இரு ஆண்டுகளுக்கு முன்பு, சின்ன மன்னூர் முத்தலாபுரம் சாலையில் இதேபோன்று சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட சுமார் 50 முதல் 60 பைப்லைன்களை நீர்வளத்துறை (WRD) அதிகாரிகள் தோண்டி எடுத்து அகற்றினர். ஆனால், தற்போதும் அதே பாணியில் எவ்வித அனுமதியும் இன்றி மீண்டும் பைப்லைன்கள் அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. மேலும், இந்த ஓடைகளில் தூர்வாரும் பணிகள் நடைபெறும்போதெல்லாம், பைப்லைன்கள் சேதமடைவதை தவிர்க்க லோக்கல் அளவில் அதிகாரிகளுக்கும் சிலருக்கும் மாமூல் மற்றும் லஞ்சம் கொடுத்து, தூர்வாரும் பணியையே செய்யவிடாமல் தடுத்து விடுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் ஓடைகள்தூர்வாரப்படாமல்பாழடைந்து வருகின்றன. உத்தமபாளையத்தில் பொதுப்பணித்துறையும் நீர்வள ஆதார அமைப்பும் (WRD) ஒரே வளாகத்தில் இயங்கி வரும் நிலையில், இவ்வளவு பெரிய அளவில் பகிரங்கமாக நடைபெறும் ஆற்று நீர் திருட்டு குறித்து நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு தெரியா



மல் இருக்க வாய்ப்பில்லை என்றும், மாமூல் பெற்றுக்கொண்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியம் காட்டுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

கேரளாவுடன் முல்லை ப்பெரியார் அணை பிரச்சனை நீடித்து வரும் சூழலிலும், குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து நிலவும் காலகட்டத்திலும், இப்படி சட்டவிரோதமாக இயற்கை ஆதாரமான ஆற்று தண்ணீரை திருடி கோடி கணக்கில் வணிகம் செய்வதை அனுமதிக்க முடியாது. விவசாயிகள் முறைப்படி மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பித்து, நீர்வளத்துறையிடம் தடையில்லா சான்றிதழ் (NOC) மற்றும் அனுமதி பெற்ற பின்னரே பைப்லைன்களை அமைக்க வேண்டும். எனவே, தேனி மாவட்ட ஆட்சியர் இந்த விவகாரத்தில் உடனடியாக நேரடியாக தலையிட்டு, சின்னமன்னூர் ஓடை பாலத்தின் அடியில் மறைத்து வைக்கப்பட்டுள்ள சட்டவிரோத பைப்லைன்களை கண்டறிந்து அகற்ற வேண்டும் என்றும், இதற்கு உடந்தையாக இருக்கும் அதிகாரிகள் மற்றும் நீர் திருட்டில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### தாடிக்கொம்பு அருகே

# முன் விரோதம் காரணமாக தொழிலாளியை பைப்பால் அடித்து கொலை மிரட்டல் விடுத்த வாலிபர் கைது



திண்டுக்கல்லை அடுத்த பூதிபுரம், கணேஷ் நகரை சேர்ந்த விஜய்(38) என்பவரை முன்விரோதம் காரணமாக திண்டுக்கல் வண்டிப்பாதையை சேர்ந்த மருதமுத்து மகன் ராஜ்குமார்(25) உள்ளிட்டோர் பைப்பால் அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாக அளித்த புகாரின் பேரில்

தாடிக்கொம்பு காவல் நிலைய ஆய்வாளர் சரவணன் தலைமையில் சார்பு ஆய்வாளர் கிருஷ்ணவேணி மற்றும் காவலர்கள் விசாரணை மேற்கொண்டு மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட ராஜ்குமாரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# பெண் தூய்மை பணியாளரை கொலை செய்த வழக்கில் குற்றவாளி கைது



கடந்த 22.08.2026 அன்று ஆவடி அடுத்த T8 முத்தாபுதுபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கர்லபாக்கம், யாதவர் தெருவில் வசித்து வந்த தூய்மை பணியாளரான லதா (வ/45), க/பெ. சுப்பிரமணி (லேட்) என்பவரது பூட்டிய வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக கிடைத்த தகவலின் பேரில், போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில், லதா இரத்தக் காயங்களுடன் இறந்து கிடந்தது தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து, அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, இச்சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்நிலையில், இன்று (24.08.2026) T8 முத்தாபுதுபேட்டை காவல் ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார், இச்சம்பவத்தில் ஈடுபட்ட கர்லபாக்கம் பகுதியைச் சேர்ந்த முனிவேல் (வ/63), த/பெ. நாகைய்யா என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில், இறந்த லதாவுடன் எதிரி முனிவேல் நீண்ட காலமாக தகாத உறவில் இருந்து வந்ததும், சம்பவத்தன்று லதா அவரது விருப்பத்திற்கு உடன்பட மறுத்ததால் ஆத்திரமடைந்த முனிவேல், தூங்கிக் கொண்டிருந்த லதாவை சுத்தி மற்றும் கத்தியால் தாக்கி கொலை செய்ததும் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்ட குற்றவாளி முனிவேலை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

100 நாளில் அதிரடி திட்டங்கள்... மக்கள் நல ஆட்சிக்கு வலுவான அடித்தளம்:

# திருவண்ணாமலையில் 5,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற தவெக 100 நாள் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்

## மாவட்ட செயலாளர் பாரதிதாசன் பெருமிதம்

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக அரசு பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்ததையொட்டி, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 100 நாள் சாதனை விளக்கமாபெரும் பொதுக் கூட்டம் திருவண்ணாமலை அண்ணா சிலை அருகே நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 5,000க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.

பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் பாரதிதாசன் பேசுகையில், தமிழக வெற்றிக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற குறுகிய காலத்திலேயே மக்களின் அடிப்படை தேவைகள், பெண்கள் பாதுகாப்பு, விவசாயிகள் நலன், இளைஞர்களின் எதிர்காலம், தொழில் வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

முதலமைச்சர் விஜய் தனது முதல் கோப்பில் கையெழுத்திட்டதன் மூலம் 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டிருப்பது ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களுக்கு மிகப்பெரிய நிவாரணமாக அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் 'சிங்கப்பெண்' சிறப்பு அதிரடிப்படை அமைக்கப்பட்டுள்ளதாகவும், இளைய தலைமுறையை சீரழிக்கும் போதைப்பொருள் கலாச்சாரத்தை ஒழிக்கும் நோக்கில் 65 போதைப்பொருள் தடுப்புப் படைகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் பாரதிதாசன் தெரிவித்தார். மதுப்பழக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக முதற்கட்டமாக 717 டாஸ்மாக் மதுபானக்கடைகள் மூடப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் பொதுமக்களின் நீண்டகால கோரிக்கைக்கு அரசு முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பொதுமக்களுக்கு தரமான உணவு மற்றும் சுகாதாரமான சேவை கிடைக்கும் வகையில் அம்மா உணவகங்கள் சீரமைக்கப்பட்டு வருவதாகவும், அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்து லஞ்சம் மற்றும் ஊழலுக்கு இடமில்லாத தூய்மையான நிர்வாகத்தை வழங்க முதலமைச்சர் விஜய் உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும் கூறினார். விவசாயிகளின் நலனிலும் அரசு அக்கறை செலுத்தி வருவதாக தெரிவித்த அவர், தேர்தல் வாக்குறுதிகளில் இடம்பெற்ற பயிர்க் கடன்தள்ளுபடி உள்ளிட்ட



நடவடிக்கைகள் மூலம் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

முதல் 100 நாட்களில் 125 பட்ஜெட் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளதாகவும், திருமணமாகும் பெண்களுக்கான 'அன்னாள் சீர்' திட்டம், மாணவர்களுக்கு ஹெல்மெட்டுடன் இலவச சைக்கிள் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பாரதிதாசன் தெரிவித்தார். தொழில் வளர்ச்சியை வேகப்படுத்தும் வகையில் 104 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, சுமார் ரூ.1 லட்சம் கோடி அளவிலான முதலீடுகளை ஈர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் புதிய தொழில் நிறுவனங்கள் உருவாகவும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் பெருகவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

“கட்சி தொடங்கிய குறுகிய காலத்திலேயே மக்களின் பேராதரவுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, 100 நாட்களில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவது தமிழக வெற்றிக்கழகத்தின்மீதான மக்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளது. ‘தமிழ்நாட்டின் வளர்ச்சி எங்கள் இலட்சியம்; மக்கள் பணியே எங்கள் முதன்மை’ என்ற முதலமைச்சர் விஜயின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தமிழக வெற்றிக் கழகம் தொடர்ந்து மக்கள் பணியில் ஈடுபடும். திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்திலும் மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்து, அவர்களின் தேவைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம்” என்று பாரதிதாசன் தெரிவித்தார். பொதுக்கூட்டத்தை சிறப்பாக நடத்துவதற்கு உறுதுணையாக இருந்த ஒன்றிய செயலாளர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட மற்றும் மாநகர நிர்வாகிகள், அணிகளின் பொறுப்பாளர்கள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பு செயலாளர் சித்தா சீனுவாசன், மாவட்ட பொருளாளர் இளங்கோ, மாவட்ட இணை செயலாளர் கலைச்செல்வன், மாநகர கவுன்சிலர் டாக்டர் பழனி மற்றும் உள்ளிட்ட ஒன்றிய சார்பு அணி செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள்மற்றும்நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மற்றும் கழகத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் கழக நிர்வாகிகளும், மற்றும் பொதுமக்களும் பெருந்திரளான அளவில் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு மதுபான உரிமம் மற்றும் அனுமதி விதிகள் 1981 மற்றும் தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்) விதிகள் 2003ன்படி இராணிப்பேட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு வாணிப கழகத்தின் (டாஸ்மாக்) கட்டுபாட்டில் இயங்கி வரும் அரசு மதுபான விற்பனை கடைகள் (டாஸ்மாக் கடை), மதுபான விற்பனை கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்கள் மற்றும் உரிமம் பெற்ற அரசு மற்றும் தனியார் நட்சத்திர அந்தஸ்து ஒட்டலில் உள்ள மதுபானகூடங்கள் ஆகிய (FL1/FL2/FL3/FL3A) அனைத்திற்கும் எதிர்வரும் 26.08.2026 (புதன் கிழமை) அன்று "மீலாடி நபி யை" முன்னிட்டு அன்று ஒரு நாள் மட்டும் உலர் தினமாக (Dry Day) ஆணையிடப்படுகிறது. எனவே, அனைத்து (FL1/FL2/FL3/FL3A) மதுபான விற்பனை கடைகள் மதுபான விற்பனை கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்கள் மற்றும் உரிமம் பெற்ற அரசு மற்றும் தனியார் நட்சத்திர அந்தஸ்து ஒட்டலில் உள்ள மதுபானகூடங்கள் ஆகிய அனைத்தும் அன்றைய நாளில் மூடப்பட்டிருக்க வேண்டும்.

மேலும், இவ்வுத்தரவை மீறி மதுக்கடைகளை திறந்து மதுபானங்களை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட மது விற்பனை உரிமதாரர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் மீது தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 1937 மற்றும் சம்மந்தப்பட்ட இதர விதிகளின்கீழ் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அதே போல்அன்றையதினத்தில்மதுக்கூடங்களில்மதுபான விற்பனை செய்வதாக தெரியவந்தாலும் மதுக்கூடங்களின் உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்திவைத்தல் மற்றும் உரிமங்களை இரத்து செய்தல்போன்றநடவடிக்கைகள்மேற்கொள்ளப்படும் எனவும்,மதுக்கூடஉரிமதாரர்கள்மீதுஉரியகுற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

### காரனோடை ஸ்ரீ அதிசய விநாயகர் கோவில் மஹா கும்பாபிஷேகம் விழா

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் ஜி.என்.டி.சாலை காரனோடை பஜாரில் அமைந்துள்ள ஸ்ரீ அதிசய விநாயகர் திருக்கோயில் புணருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா போஷகர் லங்காலிங்கம், தலைவர் சத்யா செட்டியார், செயலாளர் அரிமா சங்கர், பொருளாளர் அரிமா ஜெயசந்திரன், உபதலைவர்கள் திருஞானம், பாலமுருகன், இணை செயலாளர்கள் பாபு, கிருஷ்ணன், சுரேஷ், துணை செயலாளர்கள் பாலசுப்பிரமணியன், வேல்முருகன், இணைபொருளாளர்சம்பாலால், கௌரவ ஆலோசகர்கள் சோகன் லால், ராமசந்திரநாயுடு, மாரிமேஸ்திரி, விஜியன் மற்றும் செயல்கமிட்டி உறுப்பினர்கள் உட்பட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில்நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கிராமதேவதை வழிபாடு, விக்னேஷ்வரபூஜை, புண்யாஹவாசனம், தனபூஜை, கணபதி ஹோமம், லஷ்மி ஹோமம், நவக்கிரகம் ஹோமம், கோபூஜை, கரிவலம், வாஸ்துசாந்தி, பிரவேச பலி, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கும்பாலங்காரம், பூர்ணாஹூதி, முதல் நான்கு கால யாக சாலை பூஜை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று திருக்கோயில் விமானம், மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பித்து பின்னர் பக்தர்கள் மீது புனிதநீரை தெளித்தனர்.

இதனைத் தொடர்ந்து மூலவர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்து தூப தீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. விழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.





### கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மூன்று பேரிடம், 8.18 லட்சம் ரூபாய் மோசடி

## சைபர் கிரைம் போலீசார் விசாரணை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மூன்று பேரிடம், 8.18 லட்சம் ரூபாய் மோசடி; இதுகுறித்து சைபர்கிரைம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரை அடுத்த தொரப்பள்ளி அக்ரஹாரம் பென்னாமடத்தை சேர்ந்தவர் வேணுகோபால், 50; இவரது மொபைல் எண்ணுக்கு 'ஆர்.டி.ஓ., செலான்' பெயரில் ஒரு பைல் வந்தது. அவர் பதிவிறக்கம் செய்ததால், அவரது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கிலிருந்த, ஒரு லட்சம் ரூபாய் திருடப்பட்டது.★ ஒசூர் அருகே மோரனப்பள்ளி அருணகிரி நகரை சேர்ந்தவர் திருப்பதி, 30; தனியார் நிறுவன ஊழியர். இவரது மொபைல் எண்ணும் 'ஆர்.டி.ஓ., செலான்' பெயரில் வந்த பைலை பதிவிறக்கம் செய்ததால், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கில் இருந்த, 1.80 லட்சம் ரூபாய் திருடப்பட்டது. ★ ஒசூர் சிவக்குமார் நகரைசேர்ந்தவர்ஜெயப்பிரகாஷ், 42; உயர்தர வேலைவாய்ப்பை தேட, இணையதளம் ஒன்றில் பதிவு செய்திருந்தார். மொபைல்போனில் தொடர்பு கொண்ட ஒருவர், டைட்டான் நிறுவனத்தின் ஆள்சேர்ப்பு மேலாளர் என பேசி, வேலை வாங்கி தருவதாக உறுதியளித்தார். அதற்கு பதிவு கட்டணம், அடையாள அட்டை, திறன் தேர்வு கட்டணம் மற்றும் பயிற்சி கட்டணம் எனக் கூறி, ஐந்து லட்சத்து, 38,761 ரூபாயை பெற்று மோசடி செய்தார். புகார்படி இந்த மூன்று மோசடிகள் தொடர்பாக, கிருஷ்ணகிரி சைபர் கிரைம் போலீசார் விசாரித்து வருகின்றனர்.



திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தாடிக்கொம்புவை அடுத்த மாரம்பாடி, கோட்டை பகுதியை சேர்ந்த பொதுமக்கள் காலி குடங்களுடன் மனு அளித்தரா் அந்த மனுவில் தண்ணீர் திறந்து விடும் ஓவர் பேங்க் ஆப்ரேட்டர் பாரபட்சமாக செயல்படுவதும், பஞ்சாயத்து கிளர்க் உயர் ஜாதியினருக்கு சாதகமாகவும் எங்களைப் பழிவாங்கும் நோக்கத்துடன் குடி தண்ணீர் திறந்து விடாமல் இருக்கின்றனர். உணவே மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது

### தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் குரூப் 2 & 2A முதல்நிலை தேர்வுக்கான அறிவிப்பு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் குரூப் 2 & 2A முதல்நிலை தேர்வுக்கான அறிவிப்பு 11.08.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது இதில் தொகுதி 2 ல் 41 காலிப்பணியிடங்களும் தொகுதி 2A ல் 780 மொத்தம் 821 காலிப்பணியிடங்களுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இத்தேர்விற்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 09.09.2026 ஆகும். விண்ணப்பிக்க வேண்டிய இணையதள முகவரி www.tnpsc.gov.in. தொகுதி 2 & 2A முதல்நிலை தேர்வு நடைபெறும் நாள் 0111.2026 ஆகும்.

டி.என்.பி.எஸ்.ஸி குரூப் 28 2A முதல்நிலை தேர்வுக்கான கட்டணமில்லா நேரடி பயிற்சி வகுப்புகள் தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் சிறந்த வல்லுனர்களைக் கொண்டு நேரடி பயிற்சி வகுப்புகள் 28.08.2026 வெள்ளிக்கிழமை முதல் துவங்கப்பட உள்ளது.

இப்பயிற்சியின் போது இலவசப் பாடக்குறிப்புகள் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு பாடத்திற்கும் மாதிரி தேர்வுகள், முழு மாதிரி தேர்வுகள் நடத்தப்படும். போட்டித் தேர்விற்கு தயாராவதற்கான புத்தகங்கள் அடங்கிய நூலகம் செயல்பட்டு வருகிறது. அனைத்து வகை

தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் 2025 ல் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் டி.என்.பி.எஸ்.ஸி குரூப் 2 & 2A தேர்வில் 5 நபர்கள் தேர்ச்சி பெற்று தற்போது அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து வருகின்றனர்.

எனவே, டி.என்.பி.எஸ்.ஸி குரூப் 2 & 2A முதல்நிலை தேர்விற்கு விண்ணப்பம் செய்து தயாராகிக் கொண்டிருக்கும் தேர்வர்கள் இவ்வலுவலக நேரடி பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. பயிற்சி வகுப்பில் சேர்வது தொடர்பாக தேனி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரில் அல்லது 6379268661 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**தேனி மாவட்டம், ஆண்டிபட்டி நகரில், திறந்த வெளி உணவுகளால் ஆபத்து என புகார் வரப்பெற்றதைத்தொடர்ந்து, உணவு பாதுகாப்பு அலுவலர் (ஆண்டிபட்டி) அவர்கள் உள்ளாட்சித்துறை அலுவலர்களுடன் இணைந்து 18 கடைகளில் கூட்டாய்வு மேற்கொண்டு, இரண்டு கடைகளில் சுகாதாரமற்ற உணவுப்பொருட்கள் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டு தலா ரூ.2000/வீதம் உணவுப்பாதுகாப்பு தரங்கள் சட்டம் 2006இன்கீழ், அபராதம் விதிக்கப்பட்டு நோட்டீஸ் வழங்கப்பட்டது.**

**மேலும், உணவு மேலாண்மையை கடைபிடிக்க உணவு வணிகர்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, ஆண்டிபட்டி பகுதிகளில் உணவுப்பாதுகாப்பு குறித்து தொடர் கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**



### மனிதநேயத்துடன் செயல்பட்ட ஆயக்குடி காவல்துறைக்கு பொது மக்கள் பாராட்டு

திண்டுக்கல் மாவட்டம், பழனி ஆயக்குடி பகுதியில் மனநலம் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் பொதுமக்களை தொந்தரவு செய்வதாக சமூக வலைதளங்களில் புகார்கள் எழுந்தன. இதனை அறிந்தவுடன், ஆயக்குடி காவல் ஆய்வாளர் திரு. ராஜேஷ் அவர்கள் தலைமையிலான காவல்துறையினர், உடனடியாக மனிதநேயத்துடன் செயல்பட்டு அந்த நபரை மீட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். மேலும் அவரை மனநல காப்பகத்தில் சேர்த்து சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். சட்டத்தை மட்டும் பாதுகாக்காமல், மனிதநேயத்தையும் பாதுகாக்கும் ஆயக்குடி காவல்துறைக்கு பொதுமக்கள் சார்பாக மனமார்ந்த பாராட்டுக்களும், நன்றிகளும்!

காவல்துறையின் இந்த மனிதநேய செயல் போற்றத்தக்கது.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA